தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 19, ஸ்ரீமுக--திருவள்ளுவர் ஆண்டு-2024

1994, ஜனவரி 3, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

ஒருவர் நினைப்பதெல்லாம் உயர்வாகவே நினைக்கவேண்டும். அப்படி நினைப்பது கைகூடாமல் போனாலும் அவ்வாறு உயர்வாக நினைத்தலை ஒருபோதும் கைவிட்டுவிடக்கூடாது.

இதுவே அனைவருக்கும் என் புத்தாண்டுச் செய்தி.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (குறுக்கீடு) இது வினாக்கள்-விடைகள் நேரம் (குறுக்கீடு). வினாக்கள்-விடைகள் நேரத்தில். . .(குறுக்கீடுகள்).

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: **(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை வினாக்கள்-விடைகள் நேரத்தில் அனுமதிப்பதில்லை. வினாக்கள்-விடைகள் நேரத்தில் (குறுக்கீடுகள்). வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்தி வைக்குமாறு கேளுங்கள் (குறுக்கீடுகள்). நீங்கள் வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைக்குமாறு ஒரு கோரிக்கையை வையுங்கள். அதையே ஒரு தீர்மானமாகக் கொடுங்கள். அதன்மீது முடிவு எடுக்கலாம். (குறுக்கீடுகள்) புத்தாண்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே இதே போல நடந்திருக்கிறது. அதைப் பற்றி (குறுக்கீடுகள்) வினாக்கள்-விடைகள் நேரத்தில் வேண்டாம். தயவுசெய்து வினாக்கள்-விடைகள் நேரத்தில் வேண்டாம். (குறுக்கீடுகள்) நம்முடைய

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விதிமுறைகள் தெளிவாக இருக்கிறது. வினாக்கள்–விடைகள் நேரத்தில் கூடாது. (குறுக்கீடுகள்). நீங்கள் தீர்மானம் கொடுங்கள். நீங்கள் தீர்மானம் எழுதிக் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) தீர்மானம் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். குழப்பம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு பேசாதீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் வினாக்கள்–விடைகள் நேரம் முடிந்ததற்குப் பிறகு கிளப்பினால் நானும் பதில் சொல்லலாம். (குறுக்கீடுகள்) இப்போது இது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. வினாக்கள்–விடைகள் நேரத்தில் வினாக்கள்–விடைகளை ஒத்திவைக்குமாறு கோருவது தவிர வேறு எதுவும் அனுமதிப்பதற்கு இல்லை. (குறுக்கீடுகள்)

வினாக்கள்–விடைகள். வினா எண் 121, திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு சட்ட அமைச்சர்.

121--

ஆயுள் கைதிகளின் குழந்தைகள் நலத் திட்டம்

**22214–திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆயுள் சிறைக் கைதிகளின் குழந்தைகளுக்கான நலன்களைக் கவனிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, *சட்ட அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

(அ) உள்ளது.

(ஆ) ஆயுள் சிறைவாசிகளின் குழந்தைகளுக்கான நலன்கள் குறித்து தமிழ்நாடு சிறை நடைமுறை விதி நூலில் தகுந்த விதிகள் உள்ளன. முக்கியமாக பெண் சிறைவாசிகள் சிறையில் அனுமதிக்கப்பட்ட பிறகு, குழந்தை பிறந்தாலும், அல்லது அவர்கள் சிறைக்கு வரும்போது குழந்தையுடன் இருந்திருந்தாலோ, குழந்தையைப் பராமரிக்க உறவினரோ அல்லது வேறு யாரும் இல்லாத பட்சத்தில் மட்டும், அக்குழந்தை ஆறு வயதிற்கு உட்பட்டு இருப்பின், ஆறு வயது முடியும் வரை தாயுடனே (பெண் சிறைவாசியுடன்) சிறையில் தங்கி இருக்க அனுமதிக்கப்படுகிறது. மேற்படி குழந்தைகளுக்கு ஆறு வயது முடிவடைந்த பின்னர், எவராலும் பராமரிக்க முடியாத நிலையில், அத்தகைய சிறுவர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிமன்ற நடுவரின் பரிந்துறையின் பேரில் சிறுவர்கள்

காப்பகத்தில் சேர்க்கப்படுகிறார்கள். வேலூர் பெண்கள் தனிச்சிறையில் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக காப்பகமும், மூன்று வயதிற்குமேல் ஆறு வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்காக சிறுவர் காப்பகமும் உள்ளன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 122, **திரு. பி. சொக்கலிங்கம்;** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

122--

அனைத்து மருத்துவமனைகளிலும் நல்லபாம்புக் கடிக்கு மருத்துவ வசதி அளித்தல்.

*9372-**திரு. பி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

விவசாயிகளில் பெரும்பாலோர் நல்லபாம்புக் கடிக்கு அடிக்கடி ஆட்படும் வாய்ப்புள்ளதால் அனைத்து மருத்துவமனையிலும் நல்லபாம்புக்கடி மருந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான பாம்புகடி மருந்துகள் உட்பட அனைத்து மருந்துகளும் உடனடியாக கிடைக்க ஏதுவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சூணாம்பேடு அருகில் உள்ள உள்ளிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி நிலத்திற்கு இரவில் நீர்பாய்ச்சிய நேரத்தில் அவர் நல்லபாம்பு கடிக்கப்பட்டு, சூணாம்பேடு ஆரம்ப சுகாதார மையத்திற்கு கொண்டு போனபோது, அந்த மையத்தில் விஷப்பாம்பு கடிக்கு முறிவு மருந்து இல்லாமையால் மதுராந்தகம் மருத்துவமனைக்கு அவரை அழைத்துவரும் வழியிலே இறந்துவிட்டார்கள். சில மாதங்களுக்கு முன்னர், செய்யாறு கிராமத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும்போது நமது கட்சியைச் சேர்ந்த திரு. ஜகதீசன்